பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
01 03 2025 6 45
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வேளாண்மை மற்றும் கிராமப்புற வளம் குறித்த பட்ஜெட்டுக்குப் பிந்தைய இணையவழி கருத்தரங்கில் பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று பங்கேற்று நிபுணர்களுடன் கலந்துரையாடுகிறார்.
- நடப்பு சந்தைப் பருவத்தில் நெல் மற்றும் கோதுமை கொள்முதலை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.
- நாடாளுமன்ற தொகுதிகளை மறுவரையரை செய்யும் தமிழகத்தில் தொகுதிகளின் எண்ணிக்கை குறையாது என மத்திய அரசு உறுதியளிக்க வேண்டுமென்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.
- தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ரயில்வே திட்டங்களுக்கும், நான்குவழிச் சாலைத் திட்டங்களுக்கும் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக பிஜேபி தெரிவித்துள்ளது.
- ப்ராக் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் மூன்றாவது சுற்றில் இந்தியாவின் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்த வெற்றிபெற்றார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

வேளாண்மை மற்றும் கிராமப்புற வளம் குறித்த பட்ஜெட்டுக்குப் பிந்தைய இணையவழி கருத்தரங்கில் பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று பங்கேற்று நிபுணர்களுடன் கலந்துரையாடுகிறார்.

மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகளை திறம்பட செயல்படுத்துவதற்கான உத்தியை வகுப்பதில் கவனம் செலுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண் வளர்ச்சி மற்றும் கிராமப்புற வளத்துக்கு வலு சேர்க்கும் வகையில் பட்ஜெட்டின் தொலைநோக்குப் பார்வையை செயல் திட்டங்களாக மாற்றுவதற்கான ஒத்துழைப்பை இந்த கருத்தரங்கு ஊக்குவிக்கும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் தனியார் துறை வல்லுநர்கள், தொழில்துறை பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொள்ள உள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் திருவண்ணாமலை, நாமக்கல், தருமபுரி, கடலூர் உள்ளிட்ட 12 நகரங்களில் இந்த இணையவழி கருத்தரங்கில் பங்கேற்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண் வல்லுநர்கள், தொழில்துறை நிபுணர்கள், விவசாயிகள் இதில் பங்கேற்கின்றனர்.

**[]<<<>>>[]**

நடப்பு சந்தைப் பருவத்தில் நெல் மற்றும் கோதுமை கொள்முதலை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

புதுதில்லியில் நேற்று மத்திய நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் பொது விநியோகத்துறை செயலாளர் தலைமையில் நடைபெற்ற மாநிலங்களின் உணவு மற்றும் பொது விநியோகத்துறை செயலாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் இது குறித்து விவாதிக்கப்பட்டது.

வானிலை முன்னறிவிப்பு, பருவநிலை மாற்றம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு கொள்முதல் நடவடிக்கைகளை திட்டமிடுவது குறித்தும் இதில் ஆலோசிக்கப்பட்டது.

கரீப் பருவத்தில் 70 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யவும், ரபி பருவத்தில் 310 லட்சம் மெட்ரிக் டன் கோதுமையை கொள்முதல் செய்யவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய கல்வித்துறை இணை அமைச்சர் திரு சுகந்தா மஜூந்தார் தெரிவித்துள்ளார்.

சென்னை ஐ ஐ டி —யில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான கண்டுபிடிப்புகளின் கண்காட்சியை நேற்ற தொடங்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

சென்னை ஐ ஐ டி கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளில் நாட்டிலேயே சிறந்த கல்வி நிறுவனமாக திகழ்கிறது என்று அவர் கூறினார்.,

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகித்து வரும் தொழில்முனைவோர்களில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தொழில் நிறுவனங்களுக்கான உற்பத்தித் துறையில் தமிழகம் சிறந்து விளங்குவதாகவும் திரு சுகந்தா மஜூந்தார் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மத்திய பட்ஜெட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கும், கல்வி மற்றும் வேளாண் துறைக்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக பிஜேபி தமிழக தேர்தல் பார்வையாளர் திரு லஷ்மணன் தெரிவித்துள்ளார்.

நாகர்கோவிலில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ரயில்வே திட்டங்களுக்கும், நான்குவழிச் சாலைத் திட்டங்களுக்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

தமிழகத்தில் 77 ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன என்றும், 11 சீர்மிகு நகரங்கள் உருவாக்கப்பட உள்ளதாகவும் திரு லஷ்மணன் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

நாடாளுமன்ற தொகுதிகளை மறுவரையறை செய்யும் போது மக்கள் தொகையை கட்டுப்படுத்திய தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை குறையாது என மத்திய அரசு உறுதியளிக்க வேண்டுமென்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், இது தொடர்பாக மத்திய அரசு எழுத்துப்பூர்வமாக உறுதியளிக்க வேண்டுமென்று கூறினார்.

தமிழகத்தின் உரிமைகளை பாதுகாக்கும் விஷயத்தில் பிஜேபி உட்பட அனைத்துக் கட்சிகளும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

புனித ரமலான் நோன்பு நாளை தொடங்குவதாக தமிழக அரசின் தலைமை காஜி சலாவூதின் அயூப் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் சென்னை உள்ளிட்ட பகுதிகளில் ரமலான் பிறை நேற்று தென்படாததால் நோன்பு நாளை தொடங்கும் என்று அவர் கூறியுள்ளார்.

ராமலான் நோன்பு தொடங்கவுள்ளதையொட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தரமான பால் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் சிறந்த பால் உற்பத்தியாளர்கள் மற்றும் கூட்டுறவு சங்சங்களுக்கு பரிசுத் தொகையை மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு ராஜகண்ணப்பன் சென்னையில் நேற்று வழங்கினார்.

முன்னதாக நடைபெற்ற பால்வளத்துறை குறித்த ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், நடப்பு ஆண்டில் மாநிலத்தில் 276 புதிய பால் உற்பத்தியாளர் சங்சங்கள் தொடங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

141 நலிவடைந்த நிலையில் இருந்த பால் கூட்டுறவு சங்கங்கங்கள் மீண்டும் செல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், கலைக்கப்படுவதாக இருந்த 124 சங்சங்கள் புனரமைக்கப்பட்டு பால் கொள்முதல் தொடங்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பால் உற்பத்தியாளர்களுக்கு அதற்கான தொகையை நிலுவையின்றி பட்டுவாடா செய்வதை அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டுமென்றும் திரு ராஜ கண்ணப்பன் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

சென்னை மாநகராட்சியின் நிர்வாக பகுதிகளை சீரமைத்து மண்டலங்களின் எண்ணிக்கையை 15-லிருந்து 20-ஆக உயர்த்தி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி தற்போது 15 மண்டலங்களில் உள்ள 200 வார்டுகளை உள்ளடக்கி உள்ளது.

சென்னை மாநகராட்சி எல்லைக்குள் 22 சட்டமன்ற தொகுதிகள் அடங்கியுள்ள நிலையில், மாநகராட்சி மண்டல நிர்வாக எல்லைகளும், சட்டப்பேரவைத் தொகுதிகளின் எல்லைகளும் ஒருசேர அமையாத காரணத்தால் பல்வேறு நிர்வாக சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதால் நிர்வாக எல்லைகளை மாற்றியமைக்க அரசு முடிவு செய்துள்ளதாக நகராட்சி நிர்வாகத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நகரின் மக்கள் தொகை 88 லட்சத்தை கடந்துள்ள நிலையில், 426 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் விரிந்துள்ள சென்னை மாநகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் மாநகராட்சியால் வழங்கப்படும் சாலைகள், தெருவிளக்குகள், மழைநீர் வடிகால் உள்ளிட்ட பணிகளை முழுமையாக செயல்படுத்த இந்த நடவடிக்கை உதவிடும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ரஷ்யா – அமெரிக்கா இடையே நேரடி விமான போக்குவரத்து சேவையை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு வருவது தொடர்பாக இரு நாடுகளின் அதிகாரிகளும் பேச்சுக்கள் நடத்தியுள்ளனர்.

**[]<<<>>>[]**

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் நேற்று நிகழ்ந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் பாதுகாப்புப் படை வீரர்கள் உட்பட பத்து பேர் காயமடைந்தனர்.

**[]<<<>>>[]**

கர்நாடகாவில் உற்பத்தி செய்யப்படும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் பொருட்களின் மீது அச்சிடப்படும் விவரங்கள் மாநில மொழியிலேயே இருக்க வேண்டுமென அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

**[]<<<>>>[]**

புதுக்கோட்டை மாநகராட்சி பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் புதிதாக கட்டப்பட உள்ள ஒருங்கிணைந்த ஆயூஷ் மருத்துவமனை கட்டிடத்திற்கு மாநில அமைச்சர்கள் திரு ரகுபதி, திரு மெய்யநாதன் ஆகியோர் நேற்று அடிக்கல் நாட்டினர்.

**[]<<<>>>[]**

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே உள்ள வீடூர் அணையிலிருந்து பாசனத்துக்காக நாளை மறுநாள் முதல் 135 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தருமபுரி மாவட்டம் தொப்பையாறு அணையிலிருந்து ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு நாளை மறுநாள் முதல் 70 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்படும் என்று மாநில நீர்வளத்துறை தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

காஞ்சிபுரத்தில் நேற்று நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வேளாண் பயிர்க்கடன்களை மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் வழங்கினார்.

**[]<<<>>>[]**

சேலம் மாநகரப் பகுதிகளில் இயங்கி வரும் தனியார் மகப்பேறு மருத்துவமனைகளில் சிசு பாலினத்தை கண்டறிவதை தடுக்கும் வகையில் மருத்துவத் துறை அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தினர்.

**[]<<<>>>[]**

நாமக்கல் மாவட்டத்தில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் இன்று நடைபெறும் என ஆட்சியர் திருமதி உமா தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் திரு பிரசாந்த் தலைமையில் நேற்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

நீலகிரி மாவட்டம் பந்துலூரில் வன விலங்குகளை வேட்டையாட ஆயுதங்களுடன் வந்த இருவரை வனத்துறையினர் கைது செய்தனர்.

**[]<<<>>>[]**

ப்ராக் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் மூன்றாவது சுற்றில் இந்தியாவின் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்த வெற்றிபெற்றார்.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் அவர் செக் குடியரசின் **Nguyen thai dai van** -யை வென்றார்.

**[]<<<>>>[]**

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் பெங்களூருவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தில்லி அணி ஒன்பது விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் நேற்று ஒடிஸா – மொகமதன் அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டம் ட்டிராவில் முடிவடைந்தது.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் கேரளா அணி - ஜாம்ஷெட்பூர் அணியையும், மும்பை – மோகன் பெஹான் அணியையும் எதிர்கொள்கின்றன.

**[]<<<>>>[]**